## மாகாணக் கல்வித் திணைக்களம் - சப்பிரகமுவ
## வாராந்தப் பாடசாலை

| பாடம் - தமிழ்மொழியும் இலக்கியமும் | வாரம் : **10** |
|---|---|

| தரம் - 10 | தயாரிப்பு : F. பஜீலா<br>கே/ தெஹி / சுலைமானியா கல்லூரி<br>கன்னத்தோட்டை |
|---|---|

---

- **பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1) தாழும் உள்ளத்தர்……………………….. தாழ்வு என்பதன் எதிர்ச்சொல்லாக அமைவது,
   1. உயர்வு  2. இழிவு  3. பள்ளம்  4. மேடு

2) பழனம் என்பதன் ஒத்த சொல்
   1. காடு  2. ஆறு  3. வயல்  4. ஓடை

3) பனை வடலி என்பது போல புகையிலை
   1. பிள்ளை  2. கன்று  3. நாற்று  4. குட்டி

4) தெளிவாகத் தெரிதல் என்ற கருத்தைத் தரும் உவமைத்தொடர்
   1. ஆற்றில் கரைத்த புளிபோல  2. உள்ளங்கை நெல்லிக்கனிபோல
   3. தாமரை இலைத் தண்ணீர்போல  4. குடத்துள் விளக்குப்போல

5) Digital என்பதன் தமிழ் வடிவம்
   1. எண்மனம்  2. இணையம்  3. ஊடகம்  4. மதிப்பீடு

6) அன்னாசி என்பது எம்மொழிச் சொல்
   1. பிரெஞ்சு  2. போர்த்துக்கல்  3. அரபு  4. டச்சு

7) மார்கழி + திங்கள் என்பதை சேர்த்தி எழுதினால்
   1. மார்கழிதிங்கள்  2. மார்கழித்திங்கள்
   3. மார்திங்கள்  4. மார்கழிங்திங்கள்

8) வெள்ளம் போல மாணவர் கூட்டம் …………………….
   1. திரண்டது  2. திரண்டனர்  3. திரண்டார்கள்  4. திரண்டன.

9) மெதுவாக ஓடினான் என்பதில் மெதுவாக என்பது
   1. பெயரெச்சம்  2. வினையெச்சம்
   3. வினையடை  4. பெயரடை

10) போதைப்பொருள் எதிர்ப்பு …………..பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டது
   1. பிரகடனம்  2. பிரசாரம்  3. வைபவம்  4. நடவடிக்கை

## பகுதி – II

- **சுருக்கமான விடை தருக.**

1) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.

“நைவீர லீர்மைந்த ரனித் துயரா னாடிறந்து”

2) வர்ணனையாளருக்கு இருக்க வேண்டிய பண்புகள் 4 தருக.

3) அறிக்கை எழுதுவதனால் நாம் பெற்றுக் கொள்ளும் பயன்கள் 4 தருக.

4) வேல் + எறிந்தான் என்பதை புணர்த்தி எழுதுக.

5) வேற்றுமை தொகை என்றால் என்ன? உதாரணம் தருக.

6) நாட்டார் பாடலுக்குரிய வேறு இரு பெயர்கள் தருக.

7) புராணக் கதைகளை சுவைபட பிரசங்கம் செய்வோன் எவ்வாறு அழைக்கப்படும்?

8) தொகா நிலைத் தொடர்களின் வகைகள் இரண்டினை குறிப்பிட்டு அவற்றுக்கு உதாரணம் தருக.

9) ஆக்கப் பெயரடை, கூட்டுப் பெயரடை என்பனவற்றுக்கு உதாரணம் இரண்டு தருக.

10) தங்கத்தால் செய்த காப்பு என்ற வாக்கியத்தில் இடம்பெறும் வேற்றுமை உருபையும், பொருளையும் எழுதுக.

## பகுதி – III

- **பின்வரும் செய்யுளையும் உரைப்பகுதியையும் வாசித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.**

கான் ஆள உனை விருத்த கண்இலா
அருளிலிதன் காதல் மைந்தன்
தான் ஆளும் தரணி எல்லாம் ஒரு குடைக் கீழ்
நீ அளந் தருவான் இன்றே
மேல்நாள் நம் உரிமை அதுக் கவர்ந்த பெருந்
துணைவன், உனை வெறாத வண்ணம்
வான் ஆள வானவர் கோன்தன் பதம் மற்று
அவன்தனக்கே வழங்குவேனே.

அ) மேலே தரப்பட்ட பாடலை சந்தி பிரித்து எழுதுக.
ஆ) பாடலின் பொருளை எழுதுக
இ) இப் பாடலில் காணப்படும் சிறப்பினை குறிப்பிடுக.

2) யானை அனைர் என்ற நீதிப் பாடலைஅடிப்படையாகக் கொண்டு

அ) சிறந்த நட்பு எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது
ஆ) நன்மைதராத மூன்று விடயங்களாகக் கூறப்பட்டவை எவை?

3) நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்

அ) நாவலர் சோர்வற்றிருந்த நிலை
ஆ) நாவலர் வீறுடன்எழுந்த வேகம் என்வபன விபரிக்கப்பட்டு மாற்றினை விளக்குக.

4) பாரதியார் சுயசரிதையில்

அ) தாம் விரும்பியதை அடைய முடியாதவரின் இயல்புகள்
ஆ) பாரதியார் கொண்ட காதல் உணர்வு.